


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ மே. 19, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 224 ❖ ரூ.10

## ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு எதிரான அனைத்து வழக்குகளும் தள்ளுபடி

# பாரம்பரியம்

## தமிழ்நாட்டின் கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்த பகுதி என்ற தமிழ்நாடு அரசின் சட்ட திருத்தத்தை ஏற்கிறோம்: நீதிபதி கே.எம். ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு

புதுடெல்லி, மே.19-

ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டம் செல்லும் என்று சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்துள்ளது.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையையொட்டி மதுரை பகுதியில் அலங்காநல்லூர், பாலமேடு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் ஜல்லிக்கட்டு உலக புகழ்பெற்றவை. இதுதவிர புதுக்கோட்டை உள்ளிட்ட சில மாவட்டங்களில் கோவில் விழாக்களையொட்டியும் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வந்தது.

இதற்கிடையே கோர்ட்டு உத்தரவால் ஜல்லிக்கட்டுக்கு இடையில் தடை ஏற்பட்டது. இதை கண்டித்து பொதுமக்கள் தன்னெழுச்சியாக போராடினர். இதனையடுத்து தமிழ்நாடு அரசு அவசர சட்டம் கொண்டு வந்து ஜல்லிக்கட்டு நடத்த வழிவகை செய்தது. இதன் காரணமாக தற்போது தமிழர் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஜல்லிகட்டுபோட்டிகளை அனுமதிக்கும் தமிழ்நாடு அரசின் அவசர சட்டத்தை ரத்து செய்யக் கோரி விலங்கு நல வாரியம், பீட்டா உள்ளிட்ட அமைப்புகள் சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தன. இந்த மனுக்களை நீதிபதி கே.எம். ஜோசப் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு கடந்த ஆண்டு நவம்பர் 23-ந் தேதி விசாரிக்க தொடங்கியது. அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட அரசியல் சாசன அமர்வு, மனுக்கள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் கடந்த ஆண்டு டிசம்பர் 12-ந்தேதி ஒத்தி வைத்தது.

இந்நிலையில் இந்த மனுக்கள் மீதான வழக்கு நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்நேற்றுவிசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கு தொடர்பாக தீர்ப்பினை வாசித்த நீதிபதிகள், "தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்த தடை இல்லை. ஜல்லிகட்டு போட்டிகள் தொடர்பாக தமிழ்நாடு அரசு அளித்த ஆவணங்கள் எங்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் உள்ளன. ஜல்லிக்கட்டினை பண்பாட்டின் ஒரு பகுதியாக அறிவித்த பிறகு நீதிமன்றம் அதில் தலையிட முடியாது. ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டின் கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்த பகுதி என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பில் இருந்த குறைகளை தமிழக அரசின் சட்டத்திருத்தம் சரி செய்துள்ளது. தமிழக அரசின் சட்டத்திருத்தம் அடிப்படை உரிமைகளை மீறவில்லை. சட்ட விதிகளுக்கு உட்பட்டே உருவாக்கப்பட்டுள்ளது. ஜல்லிகட்டை அனுமதிக்கும் தமிழ்நாட்டு அரசின் அவசர சட்டம் செல்லும். கலாச்சாரம் என்றாலும் துன்புறுத்தலை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். சட்ட திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் உறுதியாக பின்பற்றப்பட வேண்டும். ஜல்லிக்கட்டில் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை மாவட்ட கலெக்டர்கள் உறுதி செய்ய வேண்டும். போட்டிகளில் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் வகையில் தமிழ்நாட்டின் சட்டம் உள்ளது. ஜல்லிக்கட்டுக்கு எதிரான மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன" என்று தெரிவித்துள்ளனர்.

ஜல்லிக்கட்டு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எடப்பாடி பழனிசாமி, பன்னீர்செல்வம், வைகோ ஆகியோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி: அதிமுக அரசின் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் மூலமாக இன்றைக்கு, தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்த அனுமதிக்கும் தமிழக அரசின் சட்டத்தை உச்ச நீதிமன்ற அரசியல் சாசன பெஞ்ச் உறுதி செய்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

"ஜல்லிக்கட்டு தமிழகத்தின் கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதி என்று சட்டமன்றம் அறிவித்துள்ள நிலையில், நீதித்துறை மாறுபட்ட கருத்தை எடுக்க முடியாது" என்கிற அஇஅதிமுக ஆட்சி காலத்தில் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய ஜல்லிக்கட்டு ஆதரவு சட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்துள்ள உச்சநீதிமன்றத்தின் கருத்தை வரவேற்பதுடன், நமது கலாச்சார அடையாளமான ஜல்லிக்கட்டிற்கு அனுமதி பெற அஇஅதிமுக அமைச்சர் விஜயபாஸ்கர், மத்திய அமைச்சர்களை நேரில் சந்தித்து பல்வேறு முறை வலியுறுத்தியதன் காரணமாகவும், கழக ஆட்சிக்குப் பின்னரும் அஇஅதிமுக தன்னையும் மனுதாரராக இணைத்துக் கொண்டு எடுத்த அனைத்து சட்ட போராட்டங்களுக்கும் துணைநின்ற தமிழகமக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம்

2017ம் ஆண்டு ஜல்லிக்கட்டு விளையாட்டு நடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக மிகப் பெரிய அளவில் போராட்டம் தமிழகத்தில் நடைபெற்றதையடுத்து, பிரதமரின் முழு ஒத்துழைப்புடன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் துரிதமான, உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு, 2017ம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசரச் சட்டம் இயற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று சட்டமாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இதற்கான சட்டமுன்வடிவு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டது. இதன்மூலம் தமிழ்நாட்டின் கலாச்சார மரபுரிமையை நிலைநாட்டிய பெருமை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

இந்தச் சட்டத்தையும் எதிர்த்து, பிராணிகள் நல வாரியம் உள்ளிட்ட சில அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தன. இதனை விசாரித்த ஐந்து நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, இன்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் இன்று வழங்கியுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பில், ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு என்பது தமிழகத்தின் கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்த பகுதி என்றும், தமிழக அரசால் இயற்றப்பட்ட சட்டம் அடிப்படை உரிமைகளை மீறவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இந்தத் தருணத்தில், 2017 ஆம் ஆண்டு விலங்குகள் வதைத்தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவினை முதல்வர் என்ற முறையில் முன்மொழியும் வாய்ப்பினை வழங்கிய ஜெயலலிதாவுக்கு, பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத்தீர்ப்பு தமிழகத்தின் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் கிடைத்த வெற்றி. இதனை நான் தமிழக மக்களுக்கு அர்ப்பணிக்கிறேன்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ: ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள சட்டத்திற்கு எதிராக, விலங்குகள் நல அமைப்புகள் சார்பாக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில், நீதிபதி கே.என். ஜோசப் தலைமையிலான அமர்வு வழக்கின் தீர்ப்பை இன்று வழங்கியுள்ளது. அதன்படி ஜல்லிக்கட்டு போட்டிக்கு தடை விதிக்க மறுத்துள்ள உச்சநீதிமன்றம், ஜல்லிக்கட்டு தொடர்பாக, 'தமிழக அரசு சமர்ப்பித்த ஆவணங்கள் திருப்தி அளிக்கும் வகையில் உள்ளது. ஜல்லிக்கட்டு தமிழகத்தின் கலாச்சாரத்தோடு ஒருங்கிணைந்த பகுதி என்பதை ஏற்றுக்கொள்கிறோம்' என்று கூறி உள்ளது.

ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு வழங்கிய ஒருமித்த தீர்ப்பில்,"ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லும்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இந்தத்தீர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்க வரவேற்கத்தக்க தீர்ப்பு ஆகும். இதன் மூலம் தமிழகத்தின் பண்பாட்டு மரபு நிலைநாட்டப்பட்டு இருக்கிறது.



### வெற்றி விழாவைக் கொண்டாடுவோம் முதல்வர் மு.க.ஸ்டாலின்

ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க முடியாது என்றும், ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லும் என்றும் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்த தீர்ப்பு தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,"தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தத் தடையில்லை என்று உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்திருப்பது தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கது!

தமிழக அரசு கொண்டு வந்த அவசரச் சட்டம் செல்லும் என்பதை நிலைநாட்ட அரசு நடத்திய சட்டப் போராட்டத்துக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டு மைதானத்தை நாம் கட்டி வருகிறோம். வரும் சனவரி மாதம் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு வெற்றி விழாவைக் கொண்டாடுவோம்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## கர்நாடக முதல் மந்திரி பதவியேற்கிறார் சித்தராமையா காங்கிரஸ் அதிகாரப்பூர்வ அறிவிப்பு



புதுடெல்லி, மே.19-

கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா, துணை முதல் மந்திரியாக டிகே சிவக்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடாகாவில் புதிய முதல் மந்திரி யார் என்பது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் டிகே சிவக்குமார், சித்தராமையா இடையே கடும்போட்டி நிலவியது. இருவரையும் கட்சி மேலிடம் அழைத்து பேசியது 5 நாட்களாக பரபரப்பு நீடித்த நிலையில், இழுபறி முடிவுக்கு வந்துள்ளது. கர்நாடாகாவின் புதிய முதல் மந்திரியாக சித்தராமையாவும் துணை முதல் மந்திரியாக டிகே சிவக்குமாரும் பொறுப்பேற்கஇருப்பதாக காங்கிரஸ் மேலிடம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. பெங்களூரில் நாளை பதவியேற்பு விழா நடைபெறுகிறது.

பெங்களூரில் 20 ஆம் தேதி பதவியேற்பு விழா நடைபெறுகிறது. சித்தராமையாவும், டி.கே.சிவக்குமாரும் காங்கிரஸின் சொத்து என்றும் காங்கிரஸ், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட கட்சிகட்சிநிர்வாகிகளின் ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில் முதல் மந்திரி மற்றும் துணை முதல் மந்திரி தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்று கே.சி. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சி 34 ஆண்டுகளுக்கு பிறகு அதிக இடங்களை கைப்பற்றி வெற்றிவாகை சூடியது. அதாவது 223 தொகுதிகளில் போட்டியிட்டு 135 இடங்களில் வெற்றிபெற்று தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை பிடித்துள்ளது. கடந்த 13-ந் தேதி ஓட்டு எண்ணிக்கை முடிவடைந்த மறுநாளே காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. மேலிட பார்வையாளர்கள் சுஷில்குமார் ஷிண்டே, ஜிதேந்திர சிங், தீபக் பபாரியா ஆகியோரின் முன்னிலையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இதில் புதிய முதல்-மந்திரியை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் காங்கிரஸ் மேலிடத்திற்கு வழங்கி ஒரே வரியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து மேலிட பார்வையாளர்கள், ஒவ்வொரு எம்.எல்.ஏ. விடமும் தனித்தனியாக கருத்துகளை கேட்டு அறிந்தனர். யாரை முதல்-மந்திரி ஆக்கலாம் என்று அவர்கள் கருத்துகளை தெரிவித்தனர். அந்த கருத்துகளை ஒருங்கிணைத்து அறிக்கை தயாரித்த மேலிட பார்வையாளர்கள், கடந்த 15-ந் தேதி டெல்லி புறப்பட்டு சென்றனர்.

அந்த அறிக்கையை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவிடம் தாக்கல் செய்தனர். பெரும்பான்மை எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு சித்தராமையாவுக்கு கிடைத்தது. இதையடுத்து மேலிடத்தின் அழைப்பின் பேரில் சித்தராமையா அன்றைய தினம் மதியம் டெல்லி புறப்பட்டு சென்றார். உடல்நலக்குறைவு காரணமாக ஒரு நாள் தாமதமாக டி.கே.சிவக்குமார் டெல்லிக்கு சென்றார். செவ்வாய்கிழமை அவர்கள் 2 பேரும் மல்லிகார்ஜுன கார்கேவை அவரது இல்லத்தில் தனித்தனியாக நேரில் சந்தித்து பேசினர். டி.கே.சிவக்குமார், தான் கஷ்டப்பட்டு கட்சியை பலப்படுத்தி வெற்றி பெற வைத்ததாகவும், அதனால் தனக்கு முதல்-மந்திரி பதவியை வழங்கியே தீர வேண்டும் என்றும் பிடிவாதமாக கூறினார். ஒருவேளை முதல்-மந்திரி பதவி வழங்காவிட்டால் ஆட்சியில் தான் பங்கேற்க போவது இல்லை என்றும் திட்டவட்டமாக கூறிவிட்டதாக தகவல் வெளியானது.

சித்தராமையா, தான் 5 ஆண்டுகள் முதல்-மந்திரியாக இருந்தபோது எந்த தவறும் செய்தது இல்லை என்றும், களங்கம் இல்லாமல் ஆட்சி நிர்வாகத்தை நடத்தியதாகவும், கட்சியின் வெற்றிக்கு தனது பங்களிப்பு அதிகமாக இருப்பதாகவும், தனக்கு முதல்-மந்திரி பதவி வழங்க வேண்டும் என்று கூறினார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தியை சந்தித்து இருவர் கூறிய கருத்துக்கள் பற்றி ஆலோசனை நடத்தினார்.

டி.கே.சிவக்குமாரின் பிடிவாதமான போக்கால் புதிய முதல்-மந்திரியை தேர்வு செய்ய முடியாமல் காங்கிரஸ் கட்சி திணறி கொண்டிருந்தது. இந்த நிலையில் தான் ஐந்து நாள் பரபரப்பு ஆலோசனைகளுக்குப் பிறகு நேற்று காங்கிரஸ் கட்சி சுமூகமாக முதல் மந்திரி விவகாரத்தை கையாண்டு இழுபறிக்கு முடிவு கட்டியுள்ளது.

## 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா ஜூலை.28 முதல் ஆக.6 வரை நடக்கிறது



புதுக்கோட்டை, மே.19-


6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா வருகின்ற ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6-ஆம் தேதி வரை புதுக்கோட்டையில் நடைபெறுகிறது.

புத்தகத் திருவிழாவிற்கான அறிவிப்பையும், பதாகையையும் நேற்று மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு வெளியிட்டார், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கே.கருணாகரன், புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பாளர்கள் அ.மணவாளன், எம்.வீரமுத்து, மு.முத்துக்குமார், டி.விமலா, மு.கீதா உளிட்டோர் பங்கேற்றனர், இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தெரிவித்தது,

தமிழ்நாட்டின் முக்கியமான புத்தகத் திருவிழாக்களில் ஒன்றாக புதுக்கோட்டை புத்தகத் திருவிழா விளங்குகிறது. 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் 100 அரங்குகளில் லட்சக்கணக்கான புத்தகங்களுடன் வாசகர்களின் பார்வைக்காக வைக்கபட உள்ளன, அரங்குளில் கீழடி உள்ளிட்ட தொல்லியல் கண்காட்சிகளும் இடம்பெற உள்ளன. தினமும் காலையில் மாணவர்களை அழைத்து வருவதற்காக பள்ளிக்கல்வித்துறை மூலமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, மாணவர்களுக்கான கோளரங்கம், எளிய அறிவியல் நிகழ்ச்சிகள், விஞ்ஞானிகளுடன் உரையாடல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாலையில், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள், இலக்கிய ஆளுமைகள், கல்வியாளர்கள், அரசு உயர் அதிகாரிகள், அறிவியலாளர்களின் உரைவீச்சுகள் நடைபெறுகிறது. படைப்பாளிகளுக்கான இலக்கிய விருதுகளும், வாசகர்களுக்கான சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன. மாணவர்கள், பொதுமக்களிடம் வாசிக்கும் பழகத்தை அதிகப்படுத்துவதும், புத்தக விற்பனையை அதிகரிப்பது, அறிவியல் மணப்பாண்மையை வளர்ப்பது உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புத்தகத் திருவிழா நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு தெரிவித்துள்ளார்.

## கள்ளச் சாராய மரணங்கள் தமிழக அரசை கண்டித்து பாஜக நாளை போராட்டம்




சென்னை, மே.19-

கள்ளச் சாராய மரணங்களைத் தடுக்க தவறிய தமிழக அரசைக் கண்டித்து அனைத்து மாவட்டங்களில் நாளை மே 20-ம் தேதி போராட்டம் நடத்தப்படும் என்று பாஜகமாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும் கள்ளச் சாராய விற்பனையையும் அவற்றால் ஏற்பட்ட துயர் மரணங்களையும் தடுக்கத் தவறிய திறனற்ற திமுக அரசைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தமிழக பாஜகவினர் மே 20ம் தேதி மாபெரும் கண்டனபோராட்டத்தை நடத்தவிருக்கிறோம்.

இந்தக் கண்டன போராட்டத்தை நமது மகளிர் அணியினர் முன் நின்று நடத்துவார்கள். சென்னையில் நடைபெறும் போராட்டத்தில் நான் பங்கேற்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்று






19 - 5 - 2023

அமாவாசை · கார்த்திகை விரதம்

வெல்லாரை குடிநீர் ஞாபக சக்தியை பெருக்கும்
சக வருடம் 1945 வைசாகம் 29

| | | |
|---|---|---|
| சோபகிருது வைகாசி 5 | MAY - FRI வெள்ளி | ஷவ்வால் 28 · அமாவாசை 139 / 226 |

அமாவாசை 39.45 (மா. 09.47) பரணி 05.01 (கா.07.53) தியாஜ் 35.49 அகஸ் 31.15 சித்த. சர்வ அமாவாசை, கார்த்திகை விரதம். இராமேஸ்வரம் பர்வதவர்த்தினி அம்மன் நவசக்தி மண்டபம் எழுந்தருளி தங்கப் பல்லக்கில் புறப்பாடு. திருத்தணி முருகப் பெருமான் கிளி வாகன சேவை.

| | நல்லநேரம் | கௌரி.நல்ல.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 12.30-1.30 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |


சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; ரிஷப லக்னம் இருப்பு நா. 4 வி. 09; சந்திராஷ்டமம்: ஹஸ்தம்
கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 5.53
ஒருவர் அறிந்தால் இரகசியம், இருவர் அறிந்தால் அம்பலம்

**இராசிபலன்**

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | இன்சொல் |
| மிதுனம் | பரிசு |
| கடகம் | சிக்கல் |
| சிம்மம் | ஓய்வு |
| கன்னி | செலவு |
| துலாம் | சிரமம் |
| விருச்சி | பயம் |
| தனுசு | எதிர்ப்பு |
| மகரம் | நலம் |
| கும்பம் | ஆதாயம் |
| மீனம் | புகழ் |

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உனது வாழ்க்கைக்கு ஒரு எல்லை அமைத்து வாழ் ஆனால் எல்லைக்குள் ஒருபோதும் வாழ்க்கையை அமைத்து விடாதே "



புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை - 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,715 | Rs. 6,184 |


# அரியலூரில் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் மாணவ,மாணவியர்கள் சேர்க்கை : கலெக்டர் அறிவிப்பு

அரியலூர்,மே.19-

அரியலூர் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில், மாணவ மாணவிகள் சேர்க்கை நடைபெறுகிறது. இது பற்றி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.ரமண சரஸ்வதி வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் மாவட்டம், 2023 2024 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விடுதிகள், முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் மாணவ/ மாணவியர் சேர்க்கை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் நடைபெறும். மாணவர்களுக்கான முதன்மை நிலை அளவிலான தேர்வுகள் வரும் 24.05.2023 அன்று அரியலூர் மாவட்ட விளையாட்டரங்கத்தில் காலை 7.00 மணி முதல் நடைபெற உள்ளது.



மாணவர்களுக்கு தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கிரிக்கெட், கால்பந்து, வாள்சண்டை, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், டேக்வாண்டோ, கையுந்துபந்து, கபாடி மேசைப்பந்து, டென்னிஸ், ஜீடோ குவாஷ் மற்றும் வில்வித்தை பளுதூக்குதல் மற்றும் மாணவியர்களுக்கு தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கால்பந்து, வாள்சண்டை, கைப்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், டேக்வாண்டோ, கையுந்துபந்து, கபாடி, டென்னிஸ், ஜீடோ, ஜிம்னாஸ்டிக்ஸ், ஸ்குவாஷ், வில்வித்தை, பளுதூக்குதல் மற்றும் மேசைப்பந்து ஆகிய விளையாட்டுகளுக்கு சேர்க்கை நடைபெற உள்ளது.

மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள விளையாட்டு விடுதி, முதன்மை நிலை விளையாட்டு மையங்களின் சேர்க்கைக்கான ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தினை இணையதள முகவரியில், ஆன்லைன் மூலமும் விண்ணப்பிக்கலாம். ஆன்லைன் விண்ணபத்தினை பூர்த்தி செய்திடுவதற்கான கடைசி நாள்.23.05.2023 அன்று மாலை 5.00 மணி ஆகும். மேலும் தகவல்களுக்கு ஆடுகள தகவல் தொடர்பு மைய அலைப்பேசி 9514000777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர விரும்பும் மாணவ, மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் 24.05.2023 அன்று காலை 7.00 மணியளவில் நடத்தப்பட இருப்பதால் அரியலூர் மாவட்டத்தில் விளையாட்டில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் , இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருமயம் அருகே இருசக்கர வாகனத்தில் சாலையை கடந்த போது எதிரே வந்த லாரி மோதி ஒருவர் பலி

திருமயம்,மே.19-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகேஉள்ள பெருந்துறை கிராமத்தைச் சேர்ந்தவர் அடைக்கண் மகன் ஆறுமுகம் (55) இவர் தனது இருசக்கர வாகனத்தில் தனது நிலத்தில் விளைந்த வெள்ளரிக்காய்களை விற்பனை செய்துவிட்டு வீடு திரும்பும் பொழுது திருமயத்தில் இருந்து விராச்சிலை செல்லும் சாலையில் உள்ள பெட்ரோல் பங்கில் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டுவிட்டு சாலையை கடந்த போது எதிரே வந்த டிப்பர் லாரி மோதி ஆறுமுகம் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த காவல்துறையினர் உடல் முழுவதும் நசுங்கியிருந்த ஆறுமுகத்தின் உடலை கைப்பற்றி பின்னர் பிரேத பரிசோதனைக்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்,

இந்த சம்பவம் அப்பகுதியில் மிகுந்த பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.



கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


### ராஜீவ் காந்தி நினைவு நாள்

# மே 21ம் தேதி தமிழகம் வருகிறார் ராகுல் காந்தி

சென்னை, மே.19-

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினம் மே 21-ம் தேதி அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தில் தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூருக்கு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வருகிறார் என தகவல் வெளியாகியுள்ளது.



தேர்தல் பிரச்சாரத்துக்காக ஸ்ரீபெரும்புதூர் வந்த ராஜீவ் காந்தி 1991-ம் ஆண்டு விடுதலைப் புலிகளால் குண்டுவைத்து கொல்லப்பட்டார் என்பது நினைவு கூரத்தக்கது.

# ஆவுடையார்கோவில் அருகே மாவடிகோட்டை கிராமத்தில் ஆழ்துளைகிணறு அமைக்க துவக்க விழா

ஆவுடையார்கோவில், மே.19-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா பூவலூர் ஊராட்சியில்உள்ளமாவடிக் கோட்டைகிராமத்தில்நேற்று சுமார்25லட்சம்மதிப்பீட்டில் ஆழ்துளை நீரேற்று நிலையத்துடன் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு துவக்கவிழா நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு ஆவுடையார்கோவில் சேர்மன்உமாதேவிதலைமை தாங்கினார், நிகழ்ச்சியில் ஒன்ய குழு உறுப்பினர்கள் சுந்தரபாண்டியன், செந்தில்குமரன், வழக்கறிஞர் ராமநாதன், முன்னாள்ஊராட்சிமன்றத் தலைவர் ராமநாதன், ஆவுடையார்கோவில் ஒன்றிய ஆணையர் சீனிவாசன் உட்பட ஒன்றிய பிரதிநிதிகள், வார்டு உறுப்பினர்கள் உட்பட 50க்கும்மேற்பட்ட ஊர் பொதுமக்கள்கலந்து கொண்டனர்.

# தேசிய நெடுஞ்சாலையில் வாகனத்தில் அடிபட்டு உயிருக்கு போராடிய மயிலுக்கு முதலுதவி செய்த நடைபயிற்சியில் ஈடுபட்ட இளைஞர்கள்

கள்ளக்குறிச்சி, மே,19-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே சென்னை திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று காலை மயில் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதிய விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு மயில் சாலையோரம் மயங்கிய நிலையில் கிடந்துள்ளது, அப்போது அவ்வழியாக நடைப்பயிற்சிக்கு சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மயங்கி கிடந்தமயிலைமீட்டுமுதல் உதவி செய்துள்ளனர், மயிலின் கழுத்து பகுதியில் பலத்த காயம் இருந்தது தெரியவந்துள்ளது, உடனே வனத்துறை மற்றும் தீயணைப்பு



துறையினருக்கு தகவல் தெரிவித்தனர், விரைந்து வந்த தீயணைப்பு மீட்புக்கு குழுவினரிடம் படுகாயம் அடைந்த மயிலை ஒப்படைத்தனர், இதனைத் தொடர்ந்து தீயணைப்புத் துறையினர் கால்நடை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

கோடை காலம் என்பதால் மயில்கள் மற்றும் மான்கள் தண்ணீரைத் தேடி விவசாய நிலங்களுக்கு தேசிய நெடுஞ்சாலையை கடந்து செல்வதால் இப்பகுதிகளில் அடிக்கடி இதுபோன்றவிபத்துக்கள் நடைபெற்று வருகின்றன, என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.



கரூர் மாவட்டம் கரூர் ஊராட்சி ஒன்றியம் வாங்கல் குப்பிச்சிபாளையம் ஊராட்சி வாங்கல் பகுதியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி நடைபெற்ற போது பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# புதுக்கோட்டையில் மாதர் சங்க சிறப்புப் பேரவைக்கூட்டம்

புதுக்கோட்டை, மே.19-

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட சிறப்புப் பேரவைக்கூட்டம் புதுக்கோட்டை ஆர்.கே.நினைவகத்தில் நேற்று நடைபெற்றது. பேரவைக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ்.பாண்டிச்செல்வி தலைமை வகித்தார், எதிர்கால திட்டமும் செயல்பாடுகளும்' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் பி.சுசீலா, உறுப்பினர் பதிவும் சங்க விரிவாக்கமும்' என்ற தலைப்பில் மாவட்ட



துணைத்தலைவர் டி.சலோமி ஆகியோர் உரையாற்றினார், முன்னதாக மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கவிதா வரவேற்க, மாவட்டப்பொருளாளர் ஜெ.வைகைராணி நன்றி கூறினார்.

பேரவையில் நிர்வாகிகள், கே.சாந்தி, எம்.மகாலெட்சுமி, ஆர்.முத்துமாரி, பி.சோபனா, இந்திராணி, ஆர். மதியரசி, எம்.நித்யா, எஸ்.நாகூரம்மாள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

### கடந்த வருடம் ஏற்பட்ட கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு

# உரிய நிவாரணம் அளிக்காத தமிழக அரசை கண்டித்து வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்ட விவசாயிகளால் பரபரப்பு

புதுக்கோட்டை,மே.19-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அறந்தாங்கி,மணமேல்குடி, ஆவுடையார் கோவில் ஒன்றியங்களில் சுமார் 4000-ஏக்கர் அளவிலான விவசாய பகுதிகள் கடந்த வருடம் ஏற்பட்ட கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது. இதனால் உரிய விளைச்சல் இல்லாமல் அவதிப்பட்டு வந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதாக கூறி தமிழக அரசின் அதிகாரிகள் கணக்கெடுத்து சென்று ஒரு வருடம் ஆன நிலையில் எந்தவித நிவாரணமும் வழங்காமல் காலம் தாழ்த்தி வந்துள்ளனர். இது குறித்து பலமுறை கோரிக்கை மனுக்கள் அளித்தும் அதிகாரிகளை சந்தித்து கேட்டும் எந்த வித பலனும் அடையாமல் இருந்துள்ளனர்.

மேலும் கடந்த ஆண்டு சில பகுதிகளில் பருவம் தவறி பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்பிற்கு முழுமையான நிவாரணத்தை தமிழக அரசு வழங்காமல் கண்துடைப்பிற்காக குறைவான தொகையை மட்டும் வழங்கிவிட்டு



கூட்டுறவு வங்கிகள் மூலமாக தாங்கள் பெற்ற விவசாய கடன்களை கட்ட சொல்லி நிர்பந்தித்து வருவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

தொடர்ந்து செய்தியாளிடம் பேசிய மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் சுப்பிரமணியன் தெரிவிக்கையில் தமிழக அரசு தொடர்ந்து விவசாயிகளுக்கு எதிரான விரோத போக்கில் ஈடுபட்டு வருவதாகவும்,இதனை கண்டிக்கும் வகையில் நேற்று மணமேல்குடி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி உள்ளதாகவும்,இன்னும் 15 நாட்களுக்குள் தங்களுக்கான இழப்பீடு வழங்கவில்லை என்றால் சுமார் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகளை டிராக்டர் மூலம் அழைத்துச் சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மிகப்பெரிய அளவில் முற்றுகை போராட்டம் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விவசாயிகள் ஊர்வலமாக வந்து, வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுபிறகு போராட்டக்காரர்களை மணமேல்குடி வட்டாட்சியர் சிவக்குமார் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார், அதில் 15 நாட்களுக்குள் மேல்மட்ட அதிகாரிகளுடன் பேசி நிவாரணம் கிடைக்க வழிவகை செய்வதாக உறுதி அளித்ததின் பெயரில் போராட்டம் கைவிடப்பட்டது, மணமேல்குடி காவல் ஆய்வாளர் குணசேகரன் தலைமையிலான பத்திற்கும் மேற்பட்ட காவல் துறை அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் இண்டர்நேஷனல் பள்ளி

# சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு ,பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் அரிய சாதனை

புதுக்கோட்டை, மே.19-

2022 - 2023 ஆம் கல்வியாண்டில் மௌண்ட் சீயோன் சிபிஎஸ்இ பள்ளியில், பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்று 100 சதவீதம் வெற்றி பெற்றுள்ளனர். பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் மாவட்ட அளவில் முதல் நான்கு இடங்களையும் ,பத்தாம் வகுப்பு மாணவர்கள் மாவட்ட அளவில் முதல் ஆறு இடங்களையும் பெற்று அரிய சாதனை படைத்துள்ளனர். பன்னிரெண்டாம் வகுப்பு மாணவன் எஸ். சூர்ய நிரஞ்சன் 475/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் முதல் இடத்தையும், மாணவன் ஆர். சாலை பொழில் 470/500 மதிப்பெண்களும், கணித பாடத்தில் 100/100 மதிப்பெண்களும்




எடுத்து மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தையும் ,மாணவி கே. பவித்ரா பானு 467/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் மூன்றாம் இடத்தையும், மாணவன் முகமது ரித்வான் 465/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் நான்காம் இடத்தையும் பிடித்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவன் என். இராம் 486/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் முதல் இடத்தையும் , மாணவன் எம்.சூர்யா இராமநாதன் ,மாணவி டி. ஸ்ரீநிதி இருவரும் 485/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் இரண்டாம் இடத்தையும்,மாணவி ஏ.ஜே. ஜோஸ்னா ,மாணவன் ஏ. மைத்ரேயன் ,மாணவன் எம். இளமுகில், மாணவன் டீ. சந்தோஷ் ஆகிய நால்வரும் 484/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் மூன்றாம் இடத்தையும் ,மாணவி ஏ. டெலன் மரியா 481/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் நான்காம் இடத்தையும், மாணவன் எஸ். கவின் குமார் 478/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் ஐந்தாம் இடத்தையும், மாணவன் ஏ. கெவின் பிரகாஷ் ,மாணவி கே.எம். வேதவியாஷினி இருவரும் 477/500 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் ஆறாம் இடத்தையும் பிடித்து அரிய சாதனை படைத்துள்ளனர்.

அதில் மாணவர்கள் என். இராம், எம். இளமுகில், டீ. சந்தோஷ், மாணவி ஏ.ஜே.ஜோஸ்னா ஆகிய நால்வரும் கணித பாடத்தில் 100/100 மதிப்பெண்களும், மாணவன் ஏ.கெவின் பிரகாஷ் சமூக அறிவியல் பாடத்தில் 100/100 மதிப்பெண்களும் எடுத்து பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் பள்ளியின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன், இணைத்தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் ,பள்ளி முதல்வர் ஜலஜா குமாரி, மேல்நிலைப்பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாணவர்களின் வழிகாட்டி சுரேஸ் கண்ணா ஆகியோர் பாராட்டி, இனிப்புகள் வழங்கி கவுரவித்தனர்.

மாணவர்களை கல்வித்துறையிலும், கலைத்துறையிலும் மாவட்ட மாநில அளவிலும், தேசிய அளவிலும் சிறந்தோராக்க பல்வேறு வாய்ப்புகளை மௌண்ட் சீயோன் பள்ளி வழங்கி வெற்றியின் உச்சத்தை தொட வைக்கிறது என கூறுவதில் பெருமிதம் கொள்கிறோம். பள்ளியில் வெற்றி இலக்கில் மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் முழு ஒத்துழைப்பு வழங்குவது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

## தீ தடுப்பு பற்றிய கட்டுரை போட்டியில்

# வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பரிசு வழங்கினார்

காரைக்கால், மே, 19 -

ஒவ்வொரு ஆண்டும் காரைக்கால் மாவட்ட தீயணைப்பு துறை சார்பாக ஏப்ரல் 14 முதல் 21-ஆம் தேதி வரை தீ தடுப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டு ஏப்ரல் 14 முதல் 21-ஆம் தேதி வரை இந்நிகழ்வு கொண்டாடப்பட்டது.



இந்நிகழ்வையொட்டி சேத்தூர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மற்றும் கோயில்பத்து மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டிகள் தீ தடுப்பு சம்பந்தமாக நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற நான்கு மாணவ, மாணவிகளுக்கு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் பரிசுகள் வழங்கினார்.

இதில் முதல் பரிசாக சேத்தூர் பள்ளியைச் சேர்ந்த கிரிஷ் என்ற மாணவனுக்கு 900 ரூபாயும், இரண்டாம் பரிசாக சக்தி என்ற மாணவனுக்கு 600 ரூபாயும் அளிக்கப்பட்டது. மேலும் கோயில்பத்து பள்ளியைச் சேர்ந்த முகம்மது இப்ராஹிம் என்பவருக்கு 900 ரூபாயும், ஹரிஷ் ராகவா என்ற மாணவனுக்கு 600 ரூபாயும் ரொக்கமாகவும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் (பேரிடர் மேலாண்மை) துணை ஆட்சியர் எஸ்.பாஸ்கரன், ஆட்சியரின் செயலர் பாலு என்கிற பக்கிரிசாமி, சுரக்குடி தீயணைப்பு அதிகாரி ஹென்றிடேவிட் மற்றும் காரைக்கால் தீயணைப்பு அதிகாரி மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.



▶ சென்னை பெரம்பூர் தொகுதி மண்டலம்.4 வட்டம் 35, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்.பி. நிதியிலிருந்து இரண்டு அங்கன்வாடி மையங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று காலை.10.00.மணிக்கு பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மண்டல குழு தலைவர் நேதாஜி யு. கணேசன், திமுக பகுதி செயலாளர் முருகன், மற்றும் கட்சியினர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பெரியார் விருது பெற்ற மிசா மதிவாணன் குடும்பத்திற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி ஆறுதல்

செம்பனார்கோவில், மே, 19 -

திமுக முப்பெரும் விழாவில் பெரியார் விருது பெற்ற மிசா பி.மதிவாணன் கடந்த மாதம் உடல் நலகுறைவு காரணமாக உயிரிழந்தார். அவரது குடும்பத்தாருக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி நேரில் சென்று ஆறுதல் கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சித் திட்ட பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆய்வு செய்தார். அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி திமுக முப்பெரும் விழாவில் பெரியார் விருது பெற்ற மிசா பி.மதிவாணன் இறப்பில் வாடும் குடும்பத்திற்கு செம்பனார்கோவிலில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார்.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குத்தாலம் க.அன்பழகன், ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட, நகர, பேரூர் திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## பொதுமக்கள் புகார்களைத் தெரிவிக்க

# நேரம் ஒதுக்குங்கள் அதிகாரிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுரை



சென்னை , மே, 19 -

பொதுமக்கள் நேரில் சந்தித்து புகார்களை தெரிவிக்க நேரம் ஒதுக்க வேண்டும் என்று மாநகராட்சி அதிகாரிகளுக்கு ஆணையர் ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தி உள்ளார்.

சென்னை மாநகராட்சி கமிஷனராக இருந்த ககன்தீப் சிங் பேடி, தமிழக மக்கள் நல்வாழ்வு துறை செயலராக இடமாற்றம் செய்யப்பட்டார். அதேநேரம், சென்னை மாநகராட்சி கமிஷனராக கூடுதல் தலைமை செயலர் ராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். இவர், பதவியேற்ற நாளில் இருந்து, ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணிகள், கழிப்பறை பணிகள் உள்ளிட்டவற்றை நேரடியாக கள ஆய்வு செய்து வருகிறார்.

அந்த வகையில், ஆர்.ஏ.புரம், திருவல்லிக்கேணி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று ஆய்வு செய்தார். அப்போது, பொதுமக்களிடம் நேரடியாக சென்று, அப்பகுதி மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அதைத்தொடர்ந்து, மாநகராட்சி அதிகாரிகளுக்கு ராதாகிருஷ்ணன் பிறப்பித்த உத்தரவில், "சென்னையில் உள்ள மக்களுக்கு பெரும்பாலான சேவைகளை மாநகராட்சியே மேற்கொண்டு வருகிறது. அதனால், பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அதிகாரிகளின் செயல்பாடு இருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ள ஆய்வு கூட்டம் போன்ற கூடுதல் பணிகள் குறைக்கப்படும். அதனால், காலை, மாலை நேரங்களில் பகுதி வாரியாக அதிகாரிகள் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பொதுமக்கள் தங்களை சந்தித்து புகார்களை தெரிவிக்கும் வகையில் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். குறிப்பாக, பழைய கட்டட இடிக்கும் பணிகள் துவங்கி, பிறப்பு, இறப்புச் சான்றிதழ் வரை பலரின் உதவியை பொதுமக்கள் நாடுகின்றனர். அவற்றை தவிர்த்து, பொதுமக்கள் கோரும் பணிகளை உரிய விசாரணை மேற்கொண்டு விரைந்து முடித்து தர வேண்டும்.

அனைத்து அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு கவுன்சிலர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். அனைத்து பணிகளிலும், கவுன்சிலர்களையும் ஈடுபடுத்த வேண்டும். குடிநீர் வாரியம், மின்சார வாரியம் போன்ற சேவை துறைகள் மேற்கொள்ளும் சாலை வெட்டு பணிகளை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

தூய்மை இந்தியா 2.0 திட்டத்தில் மேற்கொள்ளப்படும் கழிப்பறைகள், நகரப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை விரைந்து முடித்து, பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். குடியிருப்பு பகுதிகளில் கொட்டப்பட்டுள்ள குப்பை, கட்டட கழிவுகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், தினசரி குப்பை அகற்றும் பணியை மேற்கொள்ள வேண்டும்" என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# இந்திய கடலோர காவல்படை அதிகாரிகள், மீனவ பஞ்சாயத்தார்கள், முக்கிய அதிகாரிகள் உடன் மாவட்ட துணை ஆட்சியர் ஜான்சன் ஆலோசனை

காரைக்கால், மே, 19 -

காரைக்காலில் சில தினங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் கடல் வழியாக போதை பொருள் கடத்தலை தடுப்பது சம்பந்தமான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக நேற்று துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் தலைமையில் பெருந்தலைவர் காமராஜர் அரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்ரமணியன் மற்றும் மீன்வளத் துறையை சேர்ந்த துணை இயக்குநர் சவுந்தர் பாண்டியன் மற்றும் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் மற்றும் 11 மீனவ கிராமத்தை சேர்ந்த முக்கிய மீனவ பஞ்சாயத்தார்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பேசிய துணை மாவட்ட ஆட்சியர், படகுகளில் பயோமெட்ரிக் சிஸ்டம் அமல்படுத்த வேண்டும் எனவும், மீன்பிடிக்க செல்லும் பொழுது படகுகளில் இந்திய தேசிய கொடியை கட்டாயம் பறக்க விடவேண்டும், தங்கள் படகுகளில் அதன் பதிவெண்களை சரியாக தெரியும் அளவிற்கு பதிவிட வேண்டும் எனவும், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை தங்களுடைய படகுகளில் எடுத்து வர யாரும் அனுமதிக்க வேண்டாம், மேலும் அதிகாலை ஒரு மணிக்கு மீன்களை ஏலம் விடுவதை தவிர்த்து மூன்று மணிக்கு மாற்ற வேண்டுமென துணை மாவட்ட ஆட்சியர் மீனவர்களை கேட்டுக் கொண்டார்.

அதற்கு மீனவ பஞ்சாயத்தார்கள் தாங்கள் கலந்து ஆலோசித்து நல்ல முடிவை எடுக்கிறோம் என்று கூறினார்கள். மேலும் தங்கள் எல்லைக்குள் சந்தேகப்படும்படியான ஏதாவது படகுகள் வரும் பட்சத்தில், உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கும் மீன்வளத் துறைக்கும் தகவல் தெரியப்படுத்த வேண்டும் எனவும், தாங்கள் தங்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் மீன் பிடிக்க வேண்டும், எல்லை தாண்டி மீன் பிடிப்பதை முற்றிலுமாக தவிர்க்குமாறும் துணை மாவட்ட ஆட்சியர் மீனவ பஞ்சாயத்தார்களை கேட்டுக் கொண்டார்.

# சாலை மறியலில் ஈடுபட முயன்ற ஊராட்சி மன்றத் தலைவர்களை அடித்து வாகனத்தில் ஏற்றி கைது: சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்கள் விரட்டியடிப்பு

சீர்காழி, மே, 19 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே கொள்ளிடம் ஒன்றியத்தில் 42 ஊராட்சிகள் உள்ளன.





கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 16 கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட பிரதம மந்திரி வீடு கட்டும் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியினை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு வழங்காமல், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாக ஆன்லைன் டெண்டர்கள் விடுக்கப்பட்டு பணிகள் நடைபெறுவதாகவும், சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு தெரியாமலே பணிகள் நடைபெறுவதாக குற்றம் சாட்டியும், அதனை உடனே நிறுத்த கோரியும் ஊராட்சி மன்ற தலைவர்கள் நான்கு பேர் புத்தூர் கடைத் தெருவில் சாலை மறியலில் ஈடுபட முயன்றனர்.

சாலை மறியலில் ஈடுபட முயன்ற காட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் வடிவேல், புளியந்துறை ஊராட்சி மன்ற தலைவர் நேதாஜி, உமையாள்பதி ஊராட்சி மன்ற தலைவர் கிள்ளிவளவன், முதலைமேடு ஊராட்சி மன்ற தலைவர் நெப்போலியன் உள்ளிட்ட நான்கு ஊராட்சி மன்ற தலைவர்களை போலிசார் கைது செய்தனர். வாகனத்தில் ஏற மறுத்த ஊராட்சி மன்ற தலைவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி அடித்து குண்டு கட்டாக தூக்கி வாகனத்தில் ஏற்றினர்.

அப்பொழுது அவர்களுக்கு ஆதரவாக வந்த கிராம மக்களும், ஊராட்சி மன்ற தலைவர்களை கைது செய்ய விடாமல் சாலையில் அமர்ந்து, வாகனத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து சாலை மறியலில் ஈடுபட்ட கிராம மக்களையும் போலீசார் விரட்டி அடித்தனர்.

இதனால் புத்தூர் கடை வீதியில் பரபரப்பு ஏற்பட்டு போலிசார் குவிக்கப் பட்டுள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கிளை சார்பில் தமுஎகச இலக்கியச் சந்திப்பு

புதுக்கோட்டை, மே.19-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கிளை சார்பில் இலக்கிய சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்சிக்கு கிளைத் தலைவர் ஆர்டிஸ்ட் முருகேசன் தலைமை வகித்தார். 'பெரியாரும் வைக்கமும்' என்ற தலைப்பில் மாவட்ட துணைத் தலைவர் சு.மதியகழன், 'கண்ணதாசனும் கவிதையும்' என்ற தலைப்பில் கோவிந்தசாமியும் உரையாற்றினர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரெ.வெள்ளைச்சாமி வாழ்த்திப் பேசினார்.

வம்பன் செபா கவிதை வாசித்தார். சரணவன், வெற்றி, சசி ஆகியோர் பாடல்கள் பாடினர். முன்னதாக கிளைச் செயலாளர் நேசன் மகதி வரவேற்க, துணைச் செயலாளர் சசிக்குமார் நன்றி கூறினார்.

# சீர்காழி சட்டநாதர் சுவாமி கோயிலில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு திறக்கப்பட்ட மேற்கு கோபுர வாசல்

## தர்மபுரம் ஆதீனம் சிறப்பு பூஜை செய்து பக்தர்கள் சென்று வர திறந்து வைத்தார்

சீர்காழி, மே, 19 -

சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட சட்டைநாதர் சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் 24ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்தை ஒட்டி திருப்பணிகள் நிறைவடைந்துள்ளது.





இந்நிலையில் சட்டைநாதர் சுவாமி கோயிலில் உள்ள நான்கு கோபுர வாசல் வழிகளில் மேற்கு கோபுர வாசல் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக பூட்டி வைக்கப்பட்டு இருந்தது. மற்ற கோபுர வாசல்கள் வழியாக மட்டுமே பக்தர்கள் கோயிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்து சென்று வந்தனர்.

இந்நிலையில் நேற்று மேற்கு கோபுர வாசலை திறக்க தருமபுரம் ஆதீனம் முடிவு செய்து அதற்கான பூர்வாங்க பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து புனித நீர் அடங்கிய கலசம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. முன்னதாக பசு, யானை, ஒட்டகம், குதிரை ஆகியவைகளும் ஊர்வலமாக வந்தது. தொடர்ந்து தருமபுரம் ஆதீனம் 27 வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் மேற்கு கோபுர வாசலை வந்தடைந்து சிறப்பு பூஜைகள் செய்தார். தொடர்ந்து புனித நீர் தெளிக்கப்பட்டு மேற்கு கோபுர வாசல் திறக்கப்பட்டது.

திறக்கப்பட்ட உடன் முதலாவதாக பசு, குதிரை, ஒட்டகம், யானை ஆகியவை அதன் வழியே உள்ளே சென்றன. அதன் பின்னர் மேள, தாளங்கள் முழங்க தருமபுரம் ஆதீனம், பக்தர்கள் மேற்கு கோபுர வாசல் வழியாக உள்ளே சென்றனர்.

40 ஆண்டுகளாக பூட்டி வைக்கப்பட்டிருந்த மேற்கு கோபுர வாசல் தற்போது பக்தர்கள் வந்து செல்வதற்கு ஏதுவாக திறக்கப்பட்டுள்ளது சீர்காழி பகுதி பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

கடந்த மாதம் கும்பாபிஷேக யாகசாலை பணிக்காக மேற்கு கோபுர வாசல் அருகே உள்ள நந்தவனத்தில் பள்ளம் வெட்டிய போது சுவாமி ஐம்பொன் சிலைகள், தேவாரப் பதிகங்கள் தாங்கிய செப்பேடுகள் அதிகளவில் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரிசர்வ் தொகுதி எம்எல்ஏ என்பதால் அதிகாரிகள் யாரும் மதிப்பதில்லை பவானிசாகர் (தனி) தொகுதி எம்எல்ஏ பண்ணாரி பரபரப்பு குற்றச்சாட்டு

ஈரோடு, மே, 19 -

பவானிசாகர் (தனி) தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட பண்ணாரி என்பவர் வெற்றி பெற்றார். இந்த தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். இதனால் இந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அரசின் திட்டங்கள், அடிப்படை வசதிகள், ரேசன் கார்டு, உதவித் தொகை உள்ளிட்டவை பெற பண்ணாரி எம்.எல்.ஏ.வை தினமும் சந்தித்து வருகின்றனர்.

இவர் பொதுமக்கள் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளை சந்தித்து வலியுறுத்தி வந்தார். இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக எம்.எல்.ஏ.வான தன்னை யாரும் மதிப்பதில்லை என்று பரபரப்பு புகார் தெரிவித்து உள்ளார்.

இது குறித்து பண்ணாரி எம்.எல்.ஏ. கூறியதாவது, பவானிசாகர் (தனி) தொகுதியில் கடந்த 2 தேர்தல்களிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. 2011 தேர்தலில் எங்கள் கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. மேலும் இத்தொகுதியில் அதிக முறை அ.தி.மு.க. வெற்றி பெற்று உள்ளது. இந்நிலையில் இந்த தொகுதியில் இதுவரை நடக்காத ஒன்று கடந்த 2 ஆண்டுகளாக நடந்து வருகிறது. எனது தொகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக எந்த திட்டபணிகளும் முறையாக நடைபெறவில்லை. நான் எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்று 2 ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த காலத்தில் பொதுமக்களின் கோரிக்கையான பட்டா, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட அரசின் உதவி கேட்டு என்னிடம் வந்த 2 ஆயிரம் மனுக்களை பரிந்துரை செய்து வருவாய்த்துறைக்கு அனுப்பி உள்ளேன்.



ஆனால் நான் பரிந்துரைக்கும் மனுக்களை வருவாய்த்துறை அதிகாரிகள் கண்டு கொள்வதே இல்லை. என்னையும், என் பரிந்துரைகளையும் அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள். நேரில் சென்று கேட்டால் கூட இதோ செய்து விடுகிறேன் என்று கூறுவார்கள் ஆனால் செய்ய மாட்டார்கள். பொதுவாக என்னை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளமாட்டார்கள். பெயரளவுக்கு மட்டும் தான் நான் எம்.எல்.ஏ.வாக உள்ளேன்.

வி.ஏ.ஓ. முதல் தாசில்தார் வரை என்னை யாரும் மதிப்பதில்லை. மேலும் போலீசார், ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் என்னை புறக்கணிக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. என்ற முறையில் எனது உத்தரவுகள் மதிக்கப்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் நான் அருந்ததியினர் வகுப்பை சார்ந்தவன் என்பது தான். இதனால் என்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு என்னால் எந்த நன்மையும் செய்ய முடியவில்லை.

எனக்கு முன் இந்த பதவியில் இருந்தவர்களுக்கு இந்த பிரச்சனை இருந்திருக்காது. அதற்கு அ.தி.மு.க. ஆட்சி தான் காரணம். அரசு விழாக்களுக்கு அழைக்க தவறினால் விசயம் வெளியே தெரிந்து விடும் என்பதால் அரசு விழாக்களுக்கு எனக்கு அழைப்பு வருகிறது. அதிகாரிகள் என்னை மக்கள் பிரதிநிதியாக பார்க்கவில்லை. சாதி ரீதியாக தான் பார்க்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இவர் நம்மை என்ன செய்து விடுவார் என்று அதிகாரிகள் இருப்பதை பார்த்து இருக்கிறேன்.

என்னிடம் அதிகாரிகள் நடந்து கொள்ளும் விதம் குறித்து பலமுறை கலெக்டரிடம் முறையிட்டு உள்ளேன். இந்த விவகாரத்தை இதுவரை நான் கட்சி தலைமைக்கு கொண்டு செல்லவில்லை. மக்கள் விண்ணப்பித்த மனுக்கள் மீது 3 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அரசு அலுவலகங்களில் குடியேறும் போராட்டத்தை நடத்த உள்ளேன்.

### தென்காசி அரசு மருத்துவமனையில்

# மகப்பேறு மையம், குழந்தைகள் சிகிச்சை பிரிவு, கட்டிடத்திற்கு அமைச்சர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார்



தென்காசி, மே.19–

தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் பிரதான் மந்திரி ஜன் விகாஷ் காரியக்ரம் திட்டத்தின் மூலம் ரூபாய் 22.05 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மகப்பேறு மையம் மற்றும் குழந்தைகள் சிகிச்சை பிரிவு கட்டிடத்திற்கான பூமி பூஜையில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.ரவிச்சந்திரன் முன்னிலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைஅமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம். குமார், சட்டமன்ற உறுப்பினர் எஸ். பழனி நாடார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் தமிழ்ச்செல்வி, நகர்மன்றத் தலைவர் சாதிர், இணை இயக்குனர் நலப் பணிகள் மருத்துவர் கிருஷ்ணன், உறைவிட மருத்துவர் ராஜேஷ், மாவட்ட சுகாதாரத் திட்ட ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் கார்த்திக் அறிவுடைநம்பி, மருத்துவக் கண்காணிப்பாளர் மருத்துவர் ஜெஸ்வின், உதவி உறைவிட மருத்துவர் விஜயகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி மாவட்டம் சிவகிரியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பிறந்த நாளில் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் சிவகிரி மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் எஸ். எஸ். செண்பக விநாயகம் தலைமையில் அனைத்து வாதிகளிலும் புதிய உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. நிகழ்ச்சியில் பூமிநாதன், துரைராஜ், இந்திரா, குமார் சி. எஸ். மணி, ஐயப்பன், ராமச்சந்திரன், கார்த்திக், இளையராஜா, சக்திவேல், மதன், ஆகியோர் கலந்துகொண்டு புதிய உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### கந்தர்வகோட்டை ஒன்றியத்தில்

# சர்வதேச அருங்காட்சியக தினம் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் கடைபிடிக்கப்பட்டது



கந்தர்வக்கோட்டை, மே.19–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் சர்வதேச அருங்காட்சிய தினம் வேம்பன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கடைபிடிக்கப்பட்டது, இந்நிகழ்வில் புதுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார், தலைமை ஆசிரியர் ராமஜெயம் வரவேற்றார், புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமைஆசிரியர் சுதாகர், பள்ளி மேலாண்மை குழு கல்வியாளர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வக்கோட்டை ஒன்றிய வட்டாரத் தலைவர் ரகமதுல்லா சர்வதேச அருங்காட்சியக தினம் குறித்து பேசியதாவது,

அருங்காட்சியகங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டே சர்வதேச அருங்காட்சியக தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே 18ல் சர்வதேச அருங்காட்சியக தினம் கொண்டாடப்படுகிறது, அதன் படி நடப்பாண்டிற்கான சர்வதேச அருங்காட்சியக தினம் நேற்று கொண்டாடபடுகிறது, உலகளாவிய அளவில் சமூக வளர்ச்சியில் அருங்காட்சியகங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டே சர்வதேச அருங்காட்சியக தினம் 1977ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் மன்னர்கள் குறித்த செப்பேடுகள், பதப்படுத்தப்பட்ட விலங்குகள், பறவைகள், கல்வெட்டுகள், கல் சிலைகள், கனிமங்கள், மரப் படிமங்கள், உலர் தாவரங்கள், மூலிகைப்பொருட்கள், கூத்து கலைப்பொருட்கள், பனையோலைகள், அருங்காட்சியக வெளியீடுகள், உலோகப் படிமங்கள், கலைப்பொருட்கள், தொல் தமிழர்கள் பயன்படுத்திய பொருட்கள், முதுமக்கள் பானைகள், சுடுமண் படிமங்கள், மாந்த உடல் மாதிரிகள், கல் வகைகள், தொல்லுயிரிப் படிமங்கள், கனிமங்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பெற்று உள்ளன, மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன் சென்று பார்த்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று பேசினார், இந்நிகழ்வில் வானவில் மன்ற கருத்தாளர் தெய்வீக செல்வி, தன்னார்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ புதுக்கோட்டை ஸ்ரீ இராஜ ராஜன் கல்வியியல் கல்லூரிகளில் 16-வது ஆண்டு விளையாட்டுப்போட்டியில் ஓவரால் சாம்பியன்ஸிப்பை வென்ற புளூ ஹவுஸ் பயிற்சி ஆசிரியர்களுக்கு அழகப்பா பல்கலைக்கழக மேனாள்துணை வேந்தர் பேராசிரியர் சுப்பையா கோப்பையை வழங்கினார்.

### பழநி போகர் ஜெயந்தி விழாவில்

# பொன்னிமலை பகுதியில் விதைப்பந்து மூலம் ஒரு கோடி மரக்கன்று நடவு செய்ய முடிவு



திண்டுக்கல் , மே.19–

திண்டுக்கல் மாவட்டம் பழநியில் போகர் ஜெயந்தி விழா கோலாகலமாக நடைபெற்றது. பழநி தண்டாயுதபாணிசுவாமி மலைக்கோயிலில் உள்ள மூலவர் சிலை போகர் சித்தரால் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்டது. போகர் சித்தர் வைகாசி மாதம் பரணி நட்சத்திரத்தில் அவதரித்தார். நேற்று அவரது ஜெயந்தி விழாவையொட்டி, பழநி மலைக்கோயிலில் உள்ள போகர் சந்நிதியில் அவர் வணங்கிய புவனேஸ்வரி அம்மன், மரகத லிங்கத்திற்கு 16 வகை சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றது.

இதில் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள், இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம், இந்து தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் ராம.ரவிக்குமார், வெளிநாட்டினர் மற்றும் உள்ளூர் மக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். போகர் ஜெயந்தியையொட்டி, புலிப்பாணி ஆசிரமத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதேபோல் பழநி அருகேயுள்ள ஆயக்குடி அடுத்துள்ள பொன்னிமலை அடிவாரத்தில் உள்ள போகர் சித்தர் கோயிலில், போகர் ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. ஏராளமான பெண்கள் பொங்கல் வைத்து வழிப்பட்டனர். பக்தர்களுக்கு அன்னதானம் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து, கோயில் அறங்காவலர் குழு கூட்டம் தலைவர் அறிவழகன் தலைமையில் நடந்தது. துணைத் தலைவர் பழனிவேல், செயலாளர் கிருஷ்ணன், பொருளாளர் குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பொன்னிமலை பகுதியில் விதைப்பந்து மூலம் ஒரு கோடி மரக்கன்று நடவு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

### கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள

# பத்தனம்திட்டா மாவட்டத்தில் சபரிமலை ஐயப்பன் கோவில் இடங்களை பராமரிக்க கோரிக்கை



தென்காசி,மே.19–

தென்காசி மாவட்டம் கீழ பாட்டா குறிச்சி பிரம்மா கோயில் நிர்வாகி கே.கே.சரத் சந்திரபோஸ் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள பத்தனம்திட்டா மாவட்டத்தில் சபரிமலை ஐயப்பன் கோவில், பந்தளத்தில் பழமையான கோவில் அரண்மனை மணிகண்டன் வாழ்ந்து வளர்ந்து 850 ஆண்டுகள் பழமையான கட்டிடங்கள் 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் 13 அறைகள், முற்றங்கள், பூஜை அறைகள், சமையலறை, வற்றாத தண்ணீர் கிணறு, ஐயப்பன் தினமும் குளத்தில் குளித்து மகிழ்ந்த இடங்களை பராமரிப்பின்றி கிடக்கிறது. சபரிமலை வருமானத்தில் பந்தள அரண்மனை பராமரிக்கப்பட வேண்டும், சபரிமலையில் உள்ள ஐயப்பனால்தான் கேரளா கடவுளின் சொந்த நாடு என்று அழைக்கப்படுகிறது.

சபரிமலைஐயப்பனின் ஆண்டு வருமானம் சராசரியாக ரூபாய் 350 கோடி வருமானம் கிடைக்கிறது அண்டைய மாநிலங்கள் தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி பிற மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்கள் மன வேதனை அடைகின்றனர். இந்நிலையில் பந்தள அரண்மனையில் 300 உறுப்பினர்கள் வாழ்ந்து வருகின்றனர் இவர்கள் இந்த சபரிமலை ஐயப்பன் கோவிலை நம்பித்தான் வாழ்கின்றனர், சபரிமலை ஐயப்பன் அபரிவிதமான பணக்காரராக இருக்கும் போது பெற்றோர் மற்றும் உறவினர்கள் போதுமான அளவு கவனிக்கப்படாமல் கேரளா அரசு புறக்கணிக்கப்படுகிறது, ஆண்டு வருமானத்தில் 15 சதவீதத்தை அரண்மனை ஆண்டுதோறும் முன்னோடியாக வழங்குமாறு கேரளா அரசுக்கும், தேவசம் போர்டுக்கும் பரிந்துரைக்கிறேன் திருவாபரணம் மீது பந்தளம் அரண்மனையின் உரிமை, ஐயப்பனின் ஆபரணங்கள், குளத்துப்புழா ஐயப்பன் கோவில், ஆரியங்காவு ஐயப்பன் கோவில், அச்சன் கோவில் ஐயப்பன் கோவில், பிரம்மலோகத்தில் உள்ள பிரம்ம சபரி ஐயப்பனுக்கு மீண்டும் பந்தளம் அரண்மனை ஊர்வலத்தின் போது வரும் ஹண்டி வசூல் அனைத்தும் அரண்மனைக்காகவே இருக்கும் சபரிமலை ஐயப்பன் வருவாயை பந்தளம் அரண்மனைக்கு பிரித்துக் கொடுக்குமாறு கேரளா அரசுக்கும், திருவிதாங்கூர் தேவசம் போர்டுக்கும் அனைத்து பக்தர்கள் சார்பாக பேட்டியில் எடுத்துரைத்தார் கே.கே. சரத் சந்திரபோஸ் உடன் கோவில் நிர்வாகி இசக்கி பாண்டியன், கேரளாவில் உள்ள நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் நாகராஜனின் 22 ஆம் ஆண்டு நினைவு தினம்



தென்காசி, மே.19–

தென்காசி மாவட்டம் அகரக்கட்டில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் வைத்து தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியை நாடார் சமுதாயத்திற்கு மீட்க வேண்டும் என்று நாடார் சமுதாய தொழில் அதிபர்களை ஒன்று சேர்த்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து நடத்திய டி.என்.யூ நாகராஜனின் 22 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் அலங்கரிக்கப்பட்ட அவரது படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன், துணை செயலாளர் ஜான் டேவிட், தென்காசி மாவட்ட துணைச் செயலாளர் மோகன், ஜோசப், சிலம்பு மோகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் கடைகளில் கூடுதல் விலைக்கு மது விற்றால் நடவடிக்கை: அமைச்சர் செந்தில் பாலாஜி எச்சரிக்கை






சென்னை, மே.19–

டாஸ்மாக்கில் கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்வதாக கூறப்படும் புகார் குறித்து எந்தக் கடை என்று குறிப்பிட்டு புகார் கூறினால் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் அமைச்சர் செந்தில் பாலாஜி கூறியதாவது, டாஸ்மாக்கில் கூடுதலாக பணம் பெற்றுக் கொண்டு மது விற்பனை செய்வதாக கூறப்படும் புகார் குறித்து எந்தக் கடை என்று குறிப்பிட்டு புகார் கூறினால் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை 1977 பேர் மீது நடவடிக்கை எடுத்து 5.50 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நடவடிக்கை எடுக்கப்படும் நபர்களை பாதுகாக்க ஒரு சில தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்துகின்றன. புகார் பெறப்படும் டாஸ்மாக் மதுபான கடைகளில் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளனர். விஷச் சாராயம் அருந்தி 22 பேர் பலியானது விரும்பத்தகாத சம்பவம், 2020ம் ஆண்டில் அதிமுக ஆட்சியில் 20க்கும் மேற்பட்டோர் விஷச் சாராயம் அருந்தி உயிரிழந்துள்ளனர், வரும் காலங்களில் இதுபோன்றதொரு சூழல் நடக்காமல் இருப்பதில் அரசு கவனமாக உள்ளது, விஷச் சாராய விற்பனையில் தொடர்புடையவர்கள் மீது அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டின்போதும், குட்கா புகாரின் போதும், கொடநாடு கொலை வழக்கின் போதும் ராஜினாமா செய்யாத எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தற்போது அரசியலுக்காக பதவி விலக சொல்கிறார். தமிழகத்தில் 500 டாஸ்மாக் கடைகள் எண்ணிக்கையை குறைப்பதற்கான கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. கோயில், கல்வி வளாகங்கள் அருகே இருந்த சுமார் 96 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளன. தேர்தலுக்கு 6 மாதத்துக்கு முன்பாக களத்துக்கு வரக்கூடிய தலைவர் ஒருவர், ஆளுநரைச் சந்திந்து டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1 லட்சம் கோடி ஊழல் நடந்திருப்பதாக புகார் தெரிவித்திருக்கிறார்.

டாஸ்மாக் நிறுவனத்தில் 2 ஆண்டு மொத்த விற்பனையே ரூ.93 ஆயிரம் கோடிதான், அந்த வகையில் ஆண்டுக்கு சராசரியாக ரூ.45 ஆயிரம் கோடிக்கு விற்பனை நடைபெற்றிருக்கும் நிலையில், ரூ.1 லட்சம் கோடி ஊழல் எப்படி நடைபெறும். தற்போது நாடாளுமன்ற தேர்தல் வர இருப்பதால், கிருஷ்ணசாமி போன்றவர்கள், தேர்தலில் போட்டியிட கூட்டணியில் ஒரு இடமாவது பெற்றுவிட வேண்டும் என்பதற்காக, அரசின் மீது இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். டாஸ்மாக் நிறுவனத்தில் எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல், வெளிப்படைத் தன்மையோடு நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது குறித்து கருத்துகளைச் சொல்லும் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, கர்நாடகா, பாண்டிச்சேரி உள்ளிட்ட மற்ற மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக மதுவிலக்கு கொள்கைகளை அவர்களது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழியும்போது நிச்சயமாக தமிழக அரசும், முதல்வரும் நல்ல முடிவை எடுப்பார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கிங்ஸ் பொறியியல் கல்லூரி மற்றும் குயீன்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி சார்பாக அமைச்சர் ராஜா–வுக்கு வரவேற்பு விழா

கந்தர்வக்கோட்டை, மே.19–

டி.ஆர்.பி ராஜா-வின் 12 ஆண்டு கடின உழைப்பு மற்றும் கட்சிப் பணிகளில் அவரின் திறமையை கவனத்தில் கொண்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழில்துறை அமைச்சராக பரிந்துரைக்கப்பட்டு பதவியேற்றுள்ள அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா-வுக்கு ராஜ் அறக்கட்டளை , கிங்ஸ் பொறியியல் கல்லூரி மற்றும் குயீன்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி சார்பாக வரவேற்பு விழா இனிதே நடைபெற்றது. அமைச்சருக்கு அறக்கட்டளை அறங்காவலர்கள் இளவரசன், முத்துக்குமார், ராசப்பா, செயலர் இராஜேந்திரன், கிங்ஸ் பொறியியல் கல்லூரி முதல்வர் அற்புத விஜய செல்வி, குயீன்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி முதல்வர், சித்ராதேவி, பல்வேறு துறைத்தலைவர்கள், பேராசிரிய பெருமக்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் ஆகியோர் சிறப்பாக வரவேற்று சிறப்பு செய்தனர்.

அமைச்சர் தன்னுடைய உரையில் இந்நிறுவனம் வழிபாட்டுக்குரிய கல்வி கோயிலாக வளர்த்தெடுக்க விரும்புகிறோம், ஏழை எளிய மாணவ மாணவிகள் பயன்பட வேண்டும் என்பதுதான் எனது ஆசை, ஏழ்மையின் காரணமாக கல்வி எவருக்கும் மறுக்கப்படக்கூடாது என்பதால் இந்நிறுவனம் அவர்களுக்கு உதவுகிற இடமாகத்தான் திகழும் என குறிப்பிட்டார். கல்வி என்பது வெறும் புத்தகப் படிப்பை மட்டும் சார்ந்ததல்ல, விளையாட்டு போன்ற பிற துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு அரங்கில் இந்நிறுவன மாணவ, மாணவிகள் பங்கேற்கிறார்கள் என்பது தனிச்சிறப்பு. ஆசிரியர் தொழிலை நேசித்து பணியாற்றுங்கள், உங்கள் அறிவை மாணவர்கள் நலனுக்கு பயன்படுத்தும் போது கிடைக்கின்ற மகிழ்ச்சிக்கு ஈடு இல்லை என குறிப்பிட்டார். எனவே பலதுறைகளில் சிறந்த மாணவ மாணவிகளை உருவாக்குவது தங்கள் பணி என்பதை ஆசிரியர்கள் உணர வேண்டும்.




பெற்றோர்கள் தாங்கள் விரும்பியதை குழந்தைகள் மீது திணிக்காமல் குழந்தைகள் விருப்பத்திற்கு முன்னுரிமை தருவது தான் சாதனை நிகழ்த்த ஏதுவாக இருக்கும். இதனை பெற்றோர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். எதிர்காலத்தில் தேவையான செக்டார் பேஸ்டு" தனித்திறன் வளர்ப்பதற்கான திட்டத்தினை கிங்ஸ் பொறியியல் மற்றும் குயின்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரிகள் மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஜல்லிக்கட்டுக்கு தடை இல்லை
# அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு

## பொன்னிமலையில் விதைப்பந்து மூலம்
## ஒரு கோடி மரக்கன்று நடவு செய்ய முடிவு





# கர்நாடக முதல்வராக சித்தராமையா
# நாளை பதவியேற்கிறார்


| சென்னை / புதுக்கோட்டை | 19.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

19.05.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

நானா சாகிப் , இந்திய சிப்பாய் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் (பி.1824) (இ.1857)



கிருஷ்ண குமாரசிங் பவசிங் , இந்திய அரசியல்வாதி (பி.1912) (இ.1965)



நீலம் சஞ்சீவ ரெட்டி , இந்தியாவின் 6வது குடியரசுத் தலைவர் (பி.1913) (இ.1996)



கே. டி. கே. தங்கமணி , இந்தியத் தொழிற்சங்க இயக்க முன்னோடி, அரசியல்வாதி (பி.1914) (இ.2001)



## இன்றைய நினைவு நாள்

ஜம்சேத்ஜீ டாட்டா , இந்தியத் தொழிலதிபர் (பி.1839) (இ.1904)



பி. சுந்தரய்யா , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், மார்க்சிய அரசியல்வாதி (பி.1913) (இ.1985)



வி. என். ஜானகி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை, தமிழகத்தின் 4-வது முதல்வர் (பி.1924) (இ.1996)

